**பண்டாரகம பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான கடை வாடகை வருவாய் நிதிக்கூற்றுக்களில் ரூபா 9,815 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டினது கணக்காய்வு அறிக்கையின் 2.2.1(எ) திருத்தஞ் செய்யப்படுகையில் திரண்ட நிதியம் ரூபா 902,934 குறைவாகவும் கைத்தொழில் வேலைகளுக்கான உதவு தொகை ரூபா 902,934 அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட தரகுப் பணமாகிய ரூபா 27,227 மீளாய்வாண்டினது செலவினமாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால், ஆண்டிற்கான செலவினம் ரூபா 27,227 குறைவாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்புத் தொகை ரூபா 17,656,100 ஆகியபோதும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 17,275,865 ஆகக் காட்டப்பட்டமையால் நிலையான வைப்பு மீதி ரூபா 380,235 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டினது நிலையான வைப்பு வட்டி ரூபா 1,499,150 ஆகியபோதும், நிதக்கூற்றுக்களில் ரூபா 897,317 ஆகக் காட்டப்பட்டமையால் நிலையான வைப்பு வட்டி ரூபா 551,834 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டினது கைத்தொழில் உதவிக் கடன்பட்டோர் நிதிக்கூற்றுக்களில் ரூபா 487,346 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டினது கைத்தொழில் கடன்கொடுத்தோர் ரூபா 39,502,576 ஆகியபோதும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 39,616,786 ஆகக் காட்டப்பட்டமையால் கைத்தொழில் கடன்கொடுத்தோர் றெமதியும் கைத்தொழில் செலவினமும் ரூபா 114,210 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) மீளாய்வாண்டில் வீதிகளைப் புதுப்பார்ப்பதற்கு பெறப்பட்ட வைப்புத் தொகையாகிய ரூபா 2,431,158 மீளாய்வாண்டினது வருவாயாகக் கணக்கிலிடப்பட்டமையால் ஆண்டிற்கான வருவாய் ரூபா 2,431,158 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்கான ரூபா 170,982 செலவினத்திற்கு நிதியேற்பாடு செய்யப்படாமையால், மீளாய்வாண்டினது செலவினமும் கடன் கொடுத்தோர் தொகையும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 170,982 குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

---------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 25,520,375 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

---

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருவாயிலும் கூடிய செலவினம் ரூபா 8,823,523 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மீண்டுவரும் வருவாயிலும் கூடிய செலவினம் ரூபா 25,439,399 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் ரூபா 16,615,876 அதிகரிப்பு தென்பட்டது.

வருவாயில் ரூபா 14,267,567 அதிகரிப்பும் செலவினத்தில் ரூபா 2,348,309 குறைவும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 16,615,876 அதிகரிப்புக்கான பிரதான காரணிகளாகும்.

## 2. வருவாய் நிர்வாகம்

---

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

---

மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய் உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | தீர்வையும் வரியும் | 7,698 | 6,339 | 1,981 |
| (ii) | குத்தகை வாடகை | 722 | 644 | 117 |
| (iii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 264 | 264 | - |

### 2.2 தீர்வையும் வரியும்

---

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலவிய ரூபா 2,724,222 நிலுவையில் ஆண்டின்போது 77 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 2,101,948 அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பட்டியலிடப்பட்ட வருவாய் ரூபா 3,641,796 ஆகும். இதில் 63 சதவீதமான ரூபா 2,283,194 ஆண்டின்போது அறவிடப்பட்டிருந்தது.

(இ) அதிகாரிப்பற்று உப அலுவலகத்தில் தீர்வை வரிப்பதிவேடு 2014 ஆம் ஆண்டின் பின்னர் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டு ஒவ்வொரு தீர்வை வரிக் கூறிலிமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி எவ்வளவு என்பது கணிப்பிடப்படவில்லை.

**2.2.3 கடை வாடகை**

--------------------------------

(அ) 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 7,249,950 செலவில் நிர்மாணிக்கப்பட்ட பஸ் தரிப்பிடத்திற்கு எதிரேயுள்ள வர்த்தகக் கூட்டுத்தொகுதியில் உள்ள 08 கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு 2017 மே 15 வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2015 ஒக்டோபர் 25 ஆந் திகதி சபை மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் கடைகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் கட்டு நிதியாக ரூபா 9,913,000 வருவாயும் 2015 ஒக்டோபர் 25 முதல் 2016 டிசெம்பர் வரையான மாதாந்த வாடகையாகிய ரூபா 457,800 எனும் வருவாயைச் சபை இழந்திருந்தது.

**2.2.4 கைத்தொழில் வரி**

------------------------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்த கைத்தொழில் வரி நிலுவை ரூபா 44,500 ஆகும். இதில் அறவிடப்பட முடியாத ரூபா 27,000 தொடர்பாக வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. மேலும் அறவிடப்பட வேண்டியதாக இருந்த தொகை ரூபா 18,000 ஆகும்.

**2.2.5 வர்த்தக வரி**

---------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்த கைத்தொழில் வரி நிலுவை ரூபா 44,500 ஆகும். இதில் அறவிடப்பட முடியாத ரூபா 27,000 தொடர்பாக வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. மேலும் அறவிடப்பட வேண்டியதாக இருந்த தொகை ரூபா 104,400 ஆகும்.

**2.2.6 கடை வாடகை வருவாய்**

பண்டாரகம புதிய வர்த்தகக் கூட்டுத் தொகுதியில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 15 கடைகளுக்கும் உடன்படிக்கையின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் கடைகளுக்குரிய நீர், மின் கட்டணம் என்பன குத்தகையாளராலேயே செலுத்தப்பட வேண்டுமாயினும், சபையின் கீழ் உள்ள பால் விற்பனைக் கூடத்திற்கான நீர்த் தாங்கியிலிருந்து கடைகளுக்கு வழங்கப்பட்ட நீருக்கான கட்டணம் அறவிடப்படவில்லை.

**2.2.7 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 8,010,907 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 59,383,936 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

(அ) (i) 2006 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 23 ஆகும். பதவியணியினரது எண்ணிக்கை 192 ஆகும். எவ்வாறாயினும், உள்ளவாறான பதவியணியினரது எண்ணிக்கை 200 ஆகும்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட 05 பதவிகளில் 11 வெற்றிடங்கள் நிலவியதுடன் 03 பதவிகளில் 21 பேர் மிகையாகவும் இருந்தனர்.

(iii) நிரந்தரப் பதவியில் சேராத பிரதியீட்டு அடிப்படையில் 06 பேரும் ஒப்பந்த அடிப்படையில் ஒருவரும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) ஓய்வூதியத் திணைக்களத்திற்கு 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்யவேண்டிய ரூபா 858,773 ஓய்வூதியப் பங்களிப்புத்

தொகை 2017 மே 25 ஆந் திகதியளவிலும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் வீதிகளைப் பழுது பார்ப்பதற்குப் பெறப்பட்ட ரூபா 4,380,701 வைப்புத் தொகையை வீதிகளை முன்னர் இருந்த நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவதற்குப் பயன்படுத்தாது வருவாயாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் இணக்கச் சான்றிதழ்களைப் பெற்றிராத 512 கட்டிடங்களுக்கு இணக்கச் சான்றிதழ்களை வழங்கி, புதிதாக மதிப்பீட்டை மேற்கொண்டு, தீர்வை வரி வருவாயை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) மீளாய்வாண்டின்போது 16 வாரச் சந்தை வியாபாரிகளிடமிருந்து ஆரம்ப வைப்புப் பணமாக ரூபா 48,000 மற்றும் 148 வியாபாரிகளிடமிருந்து மாதாந்தக் கட்டணமாக ரூபா 689,090 என்பன நிலுவையாக இருந்தன.

### 3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட உருப்படியான வளங்கள்

இயந்திரத்தின் மூலமாகக் கருங் கற்களை உடைப்பதற்கு 2008 ஆம் ஆண்டின்போது ரூபா 2,472,740 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட கருங்கற்களை உடைக்கும் இயந்திரம் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தப்படாதிருந்தது.

### 3.3 வேலை முடிவடையாத செயற்திட்டங்கள்

2014 ஆம் ஆண்டின் மாகாண எழுச்சிச் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 10,000,000 மதிப்பீட்டில் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்ட கல்பாத மயானத்தினது வேலை 2017 மே மாதமளவிலும் முடிவடையாதிருந்தது.

### 3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாதைத்துவம்

கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கெனச் சபை தெல்தொரவத்தையில் கொம்போஸ்ட் பிரிவு ஒன்றை நடாத்தியபோதும், கழிவு அகற்றப்படும் இடத்திற்குச் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிராததுடன், கழிவுப் பொருள் முகாமைத்துவத்துக்குச் செலவிடப்படும் கிரயத்தை ஈடு செய்வதற்கான கழிவுப் பொருள் வரிக்கான சட்டமியற்றப்படவுமில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்களில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) பதவியணி முகாமைத்துவம்

(ஈ) வாகனக் கட்டுப்பாடு

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு